# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 08 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : |
|---|---|---|
| | சுட்டெண் : ........................................................ | 2.00 மணித்தியாலம் |

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. **"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே."** இங்கு உண்டி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
    1) ஊன் 2) அன்னம்
    3) ஊண் 4) தண்ணீர்

02. **"அல்லும் பகலும் ஆராய்ந்தான் - ஐயம் தீர்க்க வழி காணான்."** இங்கு ஐயம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
    1) அச்சம் 2) ஆவேசம்
    3) சந்தேகம் 4) பிச்சை

03. **"தெய்வமே! அருள் செய்வாயாக"** என்று திலகம் வேண்டினாள். **அருள்** என்பதன் எதிர்ப்பதம்
    1) கருணை 2) மருள்
    3) இருள் 4) வழி

04. முல்லைக் கொடியின் வாட்டத்தைத் தீர்க்க எண்ணினான் பாரி. இங்கு **வாட்டம்** என்பதன் எதிர்ப்பதம்
    1) வளர்ச்சி 2) வருத்தம்
    3) நாட்டம் 4) மலர்ச்சி

05. **"பெண்டிர் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்."** இங்கு **பெண்டிர்** என்பதற்குரிய எதிர்ப்பாற் சொல்
    1) ஆண் 2) மகன்
    3) இளைஞர் 4) ஆடவர்

06. தற்போது ஈமெயில் (E.mail) மூலம் பல தகவல்களைப் பெறுகிறோம். ஈமெயில் என்பதற்குரிய கலைச்சொல்
    1) கணினி 2) மின்னஞ்சல்
    3) தொலைநகல் 4) வலைத்தளம்

07. நாளை முதல் ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வருகிறது. இவ் வாக்கியம்
    1) கூற்று வாக்கியம் 2) கூட்டு வாக்கியம்
    3) ஏவல் வாக்கியம் 4) வியங்கோள் வாக்கியம்

08. சேற்றில் புதைந்த யானையைக் காகமும் கொத்தும் எனும் பழமொழியின் பொருள்
    1) சேற்றிலே புதைந்தால் யானையால் எதுவுமே செய்ய முடியாது.
    2) வல்லவனுக்கு ஆபத்து உண்டு.
    3) தற்பெருமை கொள்ளக் கூடாது.
    4) வாழ்வும் தாழ்வும் எவர்க்கும் உண்டு.


kalvi.lk

09. பின்வருவனவற்றுள் காரண, காரணஇடுகுறிப்பெயர்கள் முறையே
1) மலை, வளையல்
2) பறவை, மலை
3) அணி, முக்கண்ணன்
4) மீன்கொத்தி, வளையம்

10. சீதையினது அழகு கம்பரையே கவர்ந்துவிட்டது. இங்கு **'அது'** உருபு உணர்த்தும் பொருள்
1) பிறிதின் கிழமை
2) தற்கிழமை
3) கருவிப்பொருள்
4) கொடை

11. கரியன் எனும் குறிப்பு வினைச்சொல்லின் வினையடி
1) கரி
2) கரிய
3) கருமை
4) கரியது

12. ஐம்பெரும் காப்பியங்களுள் அடங்காதது.
1) மணிமேகலை
2) கம்பராமாயணம்
3) சிலப்பதிகாரம்
4) வளையாபதி

13. நீ ஓடி விளையாடு. இதில் **'ஓடி'** என்பது
1) பெயரெச்சம்
2) வினையடை
3) வினையெச்சம்
4) முற்றுவினை

14. க, இய, இயர் ஆகிய விகுதிகளைப் பெற்று வரும் வினை
1) வியங்கோள் வினை
2) ஏவல் வினை
3) தெரிநிலை வினை
4) குறிப்பு வினை

15. காயம், யாக்கை, மெய் எனும் சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
1) உடல்
2) ஒளி
3) உண்மை
4) உயிர்

16. பாடுதல், துன்பம், கடமை, இடம் எனும் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்
1) பாடு
2) பணி
3) அணி
4) நாகம்

17. நெல்லிற்கு நாற்று போல, பனைக்கு
1) பிள்ளை
2) குட்டி
3) நுங்கு
4) வடலி

18. **"ஓதுவான்"** எனும் சொல்லின் இடைநிலை
1) ப்
2) வ்
3) இன்
4) ற்

19. கோபம் மேலிட்டதனால் அவனது கண்கள்
1) துடித்தது
2) அழுதது
3) சிவந்தன
4) சிவந்தது

20. அங்கத்தவர்கள் எல்லோரும் கூட்டத்திற்கு வரவேண்டும் என தலைவர் கூறினார். இதில் எழுவாய்
1) கூட்டம்
2) வரவேண்டும்
3) தலைவர்
4) எல்லோரும்

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**01. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1) சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்.
2) வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்.
3) ஒழுக்கம் உயர்வு தரும்.
4) நான் ஒரு மருத்துவனானால்......

( 20 புள்ளிகள்)

**02. கல்வியில் ஆர்வமில்லாது இருக்கும் உமது நண்பனுக்கு / நண்பிக்கு அறிவுரை கூறி 75 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.** ( 12 புள்ளிகள்)

**03. பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) **"ஐய, வேண்டுவது உண்டு. அவ்வரம் தரப்பாற்று"**. இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப் பட்டது?
2) இராபர்ட் புரூஸ் சிலந்திப் பூச்சியிடம் பெற்றுக் கொண்ட படிப்பினை யாது?
3) **"யானைத் தீ"** என்னும் கொடும் பசியால் துன்புற்ற பெண் யார்?
4) இலங்கை மணித் திருநாட்டின் சுதந்திர வீரர்களாக குறிப்பிடப்படுவோர் யார்?
5) **"நாடகம் பாமர மக்களின் பல்கலைக்கழகம்"** என்று கூறிய பெரியார் யார்?
6) **"ஆக்கிமீடிசு"** என்ற கவிதையை எழுதிய ஆசிரியர் யார்?

(6 × 3 = 18 புள்ளிகள்)

**04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

குடிசையில் வசிக்கின்ற குமரன் - நாளும்
குழை யொடிப்பதற்காக வருகின்ற போது
பள்ளிக்குப் போவதேயில்லையா என்று
பரிதாபப் படலோடு அவளன்று கேட்டாள்
பள்ளியா ஏழைக்கேன் படிப்பு சோற்றுப்
பருக்கைக்கே வழியில்லை இதற்குள்ளா படிப்பு
புத்தகம் கொப்பிகள் வேண்டும் - நாளும்
போட்டிட உடுப்புகள் சிலவேனும் வேண்டும்
இவை தானே நான் தருகின்றேன்
எழுந்தோடு பள்ளிக்கு என்றாள்.

1) குமரனின் இருப்பிடம் பற்றி பாடலில் கூறப்படுவது யாது?
2) அந்த இடத்திற்கு தினமும் குமரன் செல்லக் காரணம் யாது?
3) குமரன் பள்ளி செல்லாமைக்கான காரணம் என்ன?

Education கல்வி அதியாபன


kalvi.lk

4) குமரனை விசாரித்த பெண்ணின் மனப்பான்மை யாது?

5) **ஒத்த சொல் தருக.**

பள்ளி -

சோறு -

(5 × 2 = 10 புள்ளிகள்)

**05. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்குக.**

1) பரி
2) கனி
3) நரை
4) உளவு
5) பணி

(5 × 1 = 05 புள்ளிகள்)

**06. பின்வரும் பந்தியிலுள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.**

உலகில் வாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் எண்ணற்ற வேளைகள் குவிந்து கிடக்கின்றன. எனினும் அவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்கு அவனுக்குப் போதியலவு நேறம் கிடைப்பதில்லை காரணம் எமது வேலைகள் பெறுகுவது போல நேரம் அதிகரிப்பதில்லை.

(5 × 1 = 05 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk